குன்றத்தூர் நகர தி.மு.க. சார்பில் நடைபெற்ற பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் காஞ்சி வடக்கு மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன் கலந்துகொண்டு உரையாற்றினார். அருகில் குன்றத்தூர் நகர மன்ற தலைவர் கோ.சத்தியமூர்த்தி மற்றும் நகர கழக நிர்வாகிகள் உள்ளனர்.

ஜூன் 12ல் மேட்டூர் அணை திறக்கப்படுமா?

கேள்விக்குறியாகும் குறுவை சாகுபடி டெல்டா மாவட்ட விவசாயிகள் கவலை!

த.வெ.க. அரசின் நடவடிக்கை என்ன? விவசாயிகள் கேள்வி!

தஞ்சை, ஜூன் 2- மயிலாடுதுறை மாவட்டத்தில் குறுவை சாகுபடிப் பணிகளைத் தீவிரமாகத் தொடங்கியுள்ள டெல்டா விவசாயிகள் குறுவை பாசனத்திற்குப் போதிய தண்ணீர் கிடைக்குமா என்ற பெரும் கவலையில் ஆழ்ந்துள்ள டெல்டா விவசாயிகள் மேட்டூர் அணையில் ஜூன் 12ஆம் தேதி தண்ணீர் திறப்பது குறித்து த.வெ.க. அரசு இதுவரை எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? என விவசாயிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

கடந்த திமுக ஆட்சியில் விவசாயிகளின் நலன் கருதி ஜூன் 12ஆம் தேதி பாசனத்திற்காக ஆற்றில் தண்ணீர் திறக்கப்பட்டது

இதுகுறித்து மயிலாடுதுறை சேர்ந்த விவசாயி ஒருவர் பேசுகையில், தங்களது வயல்களைச் சீரமைத்து, நாற்று நட்டு சுமார் 15 முதல் 18 நாட்கள் ஆகிவிட்டதாகத் தெரிவித்தார். கடந்த திமுக ஆட்சியில் விவசாயிகளின் நலன் கருதி ஜூன் 12ஆம் தேதி பாசனத்திற்காக ஆற்றில் தண்ணீர் திறக்கப்படும். ஆனால் தற்போதும் அதே தேதியில் தண்ணீர் திறக்கப்படும் எனப் பெரிதும் எதிர்பார்த்துக் காத்திருப்பதாகக் கூறினார்.

டெல்டா மாவட்டங்களைப் பொறுத்தவரை, விவசாயம் முற்றிலும் ஆற்றுப் பாசனத்தை நம்பி உள்ளது என்றும், நிலத்தடி நீர் (போர் வெல்) பாசனம் எதிர்பார்த்த அளவுக்குப் பலன் தராது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். ஆற்றுத் தண்ணீர் சரியான நேரத்தில் கிடைத்தால் மட்டுமே பயிர்கள் செழித்து வளர்வதோடு, விவசாயிகளுக்குப் போட்ட முதலீட்டிற்கு ஏத்த லாபமும் கிடைக்கும் என அவர் தெரிவித்தார்.

இருப்பினும், ஜூன் 12 ஆம் தேதி தண்ணீர் திறப்பது குறித்து அரசு இதுவரை என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துள்ளது என்பது பற்றிய முறையான தகவல்கள் எதுவும் தங்களுக்குத் தெரியவில்லை என்றும், திட்டமிட்டபடி தண்ணீர் திறக்கப்படுமா என்பதில் சந்தேகம் எழுந்துள்ளதாகவும் அவர் கவலை தெரிவித்தார்.

மேலும், விவசாயிகளின் கோரிக்கைகளில் அரசு போதிய கவனம் செலுத்துவதில்லை என்றும், சிறு விவசாயி களுக்கான கடன் தள்ளுபடி உள்ளிட்ட அறிவிப்புகள் வெறும் பேச்சளவிலேயே நின்றுவிட்டதாகவும், தங்களுக்கு இதனால் எந்தப் பயனும் கிடைக்கவில்லை என்றும் அவர் வேதனை தெரிவித்தார்.

அரசாங்கத்திடமிருந்து தங்களுக்கு ஆதரவான எந்தவொரு உறுதியான சிக்னலும் கிடைக்காததால், நடப்பாண்டு குறுவை சாகுபடியின் எதிர்காலம் என்னவாகுமோ என்ற அச்சத்தில் டெல்டா விவசாயிகள் தவித்து வருகின்றனர்.

தமிழ்நாடு முழுவதும் மின்கழகத் தொ.மு.ச. சார்பில்

முத்தமிழறிஞர் கலைஞர் 103வது பிறந்த நாள் விழா - நல உதவிகள்!

மின் கழகத் தொ.மு.ச. பொதுச்செயலாளர் பா.மணிமாறன் அறிக்கை!

சென்னை, ஜூன் 2- முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு, தமிழ்நாடு முழுவதும் மின்கழகத் தொமுச சார்பாக நலஉதவிகள் வழங்கப்படும் என மின்கழகத் தொமுச பொதுச்செயலாளர் பா.மணிமாறன் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

ஓய்வறியாச் சூரியன், தமிழ்நாட்டின் நவீனசிற்பி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரியும், தொழிலாளர்கள், பொறியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு பல சலுகைகளை வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தியவர்.

தமிழ்நாட்டின் பல அனல் மின் நிலையங்கள், நீர்மின் நிலையங்கள், காற்றாலை மின்நிலையங்கள், சூரிய மின் நிலையங்கள் என பல மின்நிலையங்களை துவக்கி தமிழ்நாடு மக்களுக்கு தடையில்லா மின்சாரம் வழங்கி, தமிழ்நாட்டை மின்மிகை மாநிலமாக மாற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர்.

மின்வாரியத்தில் பணிபுரிந்து 74000 ஒப்பந்த தொழிலாளர்களை பணி நிரந்தரம் செய்து அவர்களின் குடும்பத்தில் ஒளிவிளக்கை ஏற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளில் 03.06.2026ல் தமிழ்நாடு முழுவதும் உள்ள மின்கழகத் தொமுச நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் தங்கள் திட்டத்தில் / கோட்டத்தில் பேரவைக் கொடி ஏற்றி, கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தி, இனிப்புகள் வழங்கி, நலிந்த தொழிலாளர்களுக்கு நல உதவிகள் வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தமிழ்நாடு மின்வாரியத் தலைமை அலுவலகத்திலுள்ள மின்கழகத் தொமுச தலைமைச் சங்க அலுவலகத்தில் 03.06.2026 அன்று காலை 10 மணியளவில் பேரவை கொடி ஏற்றி, மின்வாரிய தொழிலாளர்கள், பொறியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு இனிப்புகள் வழங்கப்படும். பின்னர் மின்வாரியத்தில் பணிபுரியும் காவல் பணியாளர்கள் / தூய்மை பணியாளர்கள் / பொதுமக்கள் என நல உதவிகள் ரூ.1500 மதிப்புள்ள தரமான அரிசி மற்றும் மளிகை பொருட்கள் 500 பேர்களுக்கு வழங்கப்படும்.

நம் அனைவரின் நெஞ்சங்களிலும், நீங்காமல் இடம் பெற்றிருக்கும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 103வது பிறந்தநாளை தமிழ்நாடு முழுவதும் மின்கழகத் தொமுச சார்பாக சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

இவ்வாறு மின்கழகத் தொமுச பொதுச்செயலாளர் பா.மணிமாறன் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

கூ.பீ.ஜெயின் எம்.சி தலைமை! முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா!

வில்லிவாக்கம் மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் அறுசுவை உணவு: பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. வழங்குகிறார்!

தயாநிதிமாறன் எம்.பி – அ.வெற்றிஅழகன் – ப.ரங்கநாதன் – கார்த்திக் மோகன் பங்கேற்பு!

சென்னை, ஜூன். 02 - வில்லிவாக்கம் மேற்கு பகுதிச் செயலாளர், மண்டலக் குழுத் தலைவர் கூ.பீ. ஜெயின் எம்.சி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை கிழக்கு மாவட்டம், வில்லிவாக்கம் மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாள் விழா முன்னிட்டு நாளை (03.06.2026 - புதன்கிழமை) முன்னாள் அமைச்சர், சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. கலந்து கொண்டு கழக கொடியேற்றி, இனிப்புகளை பொதுமக்களுக்கு வழங்கி காலை மற்றும் மதிய உணவு வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சியில் கழக விளையாட்டு மேம்பட்டு அணி செயலாளர், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன் எம்.பி, கழக பொறியாளர் அணி இணைச் செயலாளர், முன்னாள் வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றிஅழகன், தலைமை செயற்குழு உறுப்பினர் ப.ரங்கநாதன், தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் கார்த்திக் மோகன், வில்லிவாக்கம் கிழக்கு பகுதிச் செயலாளர் வே.வாசு, வி.பி.ஜவஹர் பாபு ஆகியோர் பங்கேற்கின்றனர்.

இந்நிகழ்ச்சிகள் நடைபெறும் வருமாறு:-

வட்டச் செயலாளர் மா.அகிலன் தலைமையில் 95 வது வட்டம், மேட்டு தெரு, காலை 8:30 மணி

கொடியேற்றி இனிப்புகள் வழங்கி 500 பேருக்கு சிற்றுண்டி வழங்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

வட்டச் செயலாளர் க.சுகுமாரன் தலைமையில் 94 வது (ஆ) வட்டம், ராஜ மங்கலம், அம்பேத்கர் சிலை அருகில் காலை 9:00 மணிக்கு கழகக் கொடியேற்றி இனிப்புகள் வழங்கி 300 பேருக்கு சிற்றுண்டி வழங்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

வட்டச் செயலாளர் சிட்கோ சேகர் தலைமையில் 94 வது வட்டம், சிட்கோ நகர், வட்டச் செயலாளர் அலுவலகம், காலை 9:15 மணிக்கு, கொடியேற்றி இனிப்புகள் வழங்கி 300 பேருக்கு சிற்றுண்டி வழங்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

வட்டச் செயலாளர் கே.எஸ்.பாபு தலைமையில் 104 வது (ஆ) வட்டம், நாவலர் நகர், காலை 9:30 மணி

கொடியேற்றி இனிப்புகள் வழங்கி 300 பேருக்கு சிற்றுண்டி வழங்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

வட்டச் செயலாளர் பா.ஜானி தலைமையில் 95 வது (அ) வட்டம், புதிய ஆவடி சாலை, வட்டச் செயலாளர் அலுவலகம், மதியம் 11:00 மணிக்கு கொடியேற்றி இனிப்புகள் வழங்கி 500 பேருக்கு மதிய உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

வட்டச் செயலாளர் ஆர். தீனதயாளன் தலைமையில் 94 வது (அ) வட்டம், பாலியம்மன் கோயில் அருகில், மதியம் 11:30 மணிக்கு,

கொடியேற்றி இனிப்புகள் வழங்கி 300 பேருக்கு மதிய உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

வட்டச் செயலாளர் சொ.முருகேசன் தலைமையில் 104 வது வட்டம், தங்கம் காலனி, மதியம் 12:00 மணிக்கு,

கொடியேற்றி இனிப்புகள் வழங்கி 300 பேருக்கு மதிய உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

வட்டச் செயலாளர் ப.லோகுபாபு தலைமையில் 104 வது (அ) வட்டம், டி.வி.நகர், அண்ணா சிலை அருகில், மதியம் 12:30 மணிக்கு, கொடியேற்றி இனிப்புகள் வழங்கி 300 பேருக்கு மதிய உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் பொதுக் குழு உறுப்பினர்கள் சாவித்திரி ஸ்ரீ வீரராகவன், டி.வி.செம்மொழி எம்.சி., மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் சுதா தீனதயாளன் எம்.சி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வானவில் விஜய், ஆர். வரதன், ஜி,ஜெ.பிரபு, பகுதி நிர்வாகிகள் : ஜெ.எஸ்.பிரபு, வி.து.ராமமூர்த்தி, பா. இளையா, ம.கலைச்செல்வி, ஐ.சி.எப்.சுரேஷ்பாபு.

மாவட்டப் பிரதிநிதிகள் ஆர்.கோபாலகிருஷ்ணன், கோ.மணிவேந்தன், பா.தே. தீனதயாளன், க.மணிமாறன், எஸ்.கே.பி.தீபக்குமார், ம.சுந்தர் எபி, ஆ.சக்திவேல், சிட்கோ.பி.சுரேஷ்பாபு, பூ. சத்தியேந்திரன்.

மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி, வட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், BLA2, BDA, BYO, கழக முன்னோடிகள், செயல்வீரர்கள் ஆகியோர் கலந்து கொண்டு விழாவினை சிறப்பிக்க வேண்டுமாய் பகுதிக் கழகச் செயலாளர், மண்டலக் குழு தலைவர் கூ.பீ.ஜெயின் எம்.சி. தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை கிழக்கு மாவட்டம் அம்பத்தூர் கிழக்கு பகுதி சார்பில்

முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் நிகழ்ச்சிகள்!

பகுதிச் செயலாளர் எம்.டி.ஆர்.நாகராஜ் அறிக்கை!

சென்னை, ஜூன்.2- அம்பத்தூர் கிழக்கு பகுதிச் செயலாளர் எம்.டி.ஆர். நாகராஜ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

அம்பத்தூர் கிழக்கு பகுதிக்குட்பட்ட கீழ்கண்ட பல்வேறு இடங்களில் முத்தமிழ் அறிஞர் முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் 103-வது பிறந்த நாள் 03.06.2026 அன்று வட்ட வாரியாக கீழ்கண்ட இடங்களில் நிகழ்ச்சிகள் நடைபெறும்.

வட்டம், தலைமை, நிகழ்ச்சி இடம், நேரம் வருமாறு:

84அ-த.வ.லால் - வட்ட செயலாளர்-கழக கொடியேற்றி இனிப்பு வழங்குதல்-தொடர்வண்டி சாலை, பிரிட்டானியா எதிரில்-7.00 மணி

82-மு.சண்முகம் - வட்ட செயலாளர்-கழக கொடியேற்றி 300 நபர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்குதல்-கருக்கு மெயின் ரோடு, மேனாம்பேடு-8.00 மணி

82அ-ஆ.சுந்தர் ராஜ் - வட்ட செயலாளர்-கழக கொடியேற்றி இனிப்பு வழங்குதல்-மேற்கு பாலாஜி நகர், ரெட் ஹில்ஸ் ரோடு-7.30 மணி

84-மு.விஜயகுமார் - வட்ட செயலாளர்-கழக கொடியேற்றி இனிப்பு வழங்குதல்-ஸ்டேஷன் ரோடு, கொரட்டூர் பஸ் நிலையம் அருகில்-8.30 மணி

83அ-சு.மோகன் குமார் - வட்ட செயலாளர் எஸ். பாபு (வட்ட பொருளாளர்)-கழக கொடியேற்றி 300 நபர்களுக்கு பிரியாணி வழங்குதல்-நேதாஜி நகர் மெயின் ரோடு, கழக கொடி கம்பம் -12.00 மணி

83அ-சு.மோகன் குமார் - வசந்த் கார்த்திகேயன் (பகுதி விளையாட்டு அணி அமைப்பாளர்)-கழக கொடியேற்றி 300 நபர்களுக்கு பிரியாணி வழங்குதல்-நேதாஜி நகர் மெயின் ரோடு, கழக கொடிகம்பம் -12.00 மணி

83-சீ.லோகநாதன் - வட்ட செயலாளர்-கழக கொடியேற்றி 500 நபர்களுக்கு பிரியாணி வழங்குதல்-வட்ட கிளை அலுவலகம், சிவலிங்கபுரம் -01.00 மணி

அம்பத்தூர் கிழக்கு பகுதிக்கு உட்பட்ட மாவட்ட, பகுதி வட்ட நிர்வாகிகள், மாவட்ட பகுதி வட்ட அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், BLA-2, BDA, BYO மற்றும் முன்னால் நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், வட்ட கழக செயல் வீரர்கள் கழக உடன்பிறப்புகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுகொள்கிறோம்.

இவ்வாறு அம்பத்தூர் கிழக்கு பகுதிச் செயலாளர் எம்.டி.ஆர்.நாகராஜ் தெரிவித்துள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள்! கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

திட்டக்குடி - விருத்தாசலம் - நெய்வேலி - பண்ருட்டி சட்டமன்றத் தொகுதிகளில் கொடியேற்றி - நலஉதவிகள்!

மாவட்டக் கழகச் செயலாளர் சி.வெ.கணேசன் அறிக்கை!

கடலூர், ஜூன் 02 - கடலூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் சி.வெ.கணேசன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவர் அவர்களின் உத்தரவின் படி, கழக இளைஞரணி செயலாளர், சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிக்காட்டுதலின்படி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு ஜூன் 3 அன்று கடலூர் மேற்கு மாவட்டம், திட்டக்குடி, விருத்தாசலம், நெய்வேலி, பண்ருட்டி ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் உள்ள ஒன்றிய - நகர- பேரூர்- கிளை- வார்டு- பகுதிகளில் கழக கொடியேற்றி இனிப்புகள் வழங்கியும், பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்க வேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதுசமயம் மாவட்ட கழக நிர்வாகிகள்- தலைமை செயற்குழு, பொதுக்குழுக் உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு, கழக செயலாளர்கள், நிர்வாகிகள், மாவட்ட அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், முன்னாள் - இந்நாள் உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் அந்தந்த பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சியை சிறப்பாக செய்திட வேண்டும் என மாவட்டக் கழகச் செயலாளர் சி.வெ.கணேசன் எம்.எல்.ஏ. கேட்டுக்கொண்டுள்ளார்.

இரா.லட்சுமணன் தலைமை !

ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் ! உணவு!

ஆர்.டி.சேகர் வழங்குகிறார்! கலாநிதி வீராசாமி - ஜே.ஜே.எபினேசர் பங்கேற்பு!

சென்னை, ஜீன்.02- சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி சார்பாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாளை முன்னிட்டு நாளை (03.06.2026 புதன்கிழமை) பகல் 12.00 மணியளவில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் அலுவலகம் அருகில், தண்டையார் பேட்டை செ-81ல் நடைபெறுகிறது.

ஆர்.கே.நகர் கிழக்கு பகுதிச் செயலாளர் இரா.லட்சுமணன் தலைமை வகிக்கிறார்.

என்.அனிபா, ஆர்.டி. ராஜா, கே.பாலு, எம்.வேதலட்சுமி, கே.பி.சதிஷ்குமார், ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் பொதுமக்களுக்கு உணவு வழங்குகிறார்.

இதில் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, ஜே.ஜே.எபினேசர், இரா.மதிவாணன், என்.மருதுகணேஷ், ஆர்.வெற்றிவீரன், டி.வி.முத்துகிருஷ்ணன், த.தமிழ்கொடி, கு.நற்குணம், வெ.சு.சத்தியநாராயணன், வி.வி.ரமேஷ், ஒலி ஒளி பாபு, இர. பொன்இளவரசன், என்.எம்.கதிரேசன், தா.வ.மு.கஜேந்திரன், நா. கோதண்டன்ஹ மா.நாகராஜன், ச.தமிழ்செல்வன், பொ.து.ராஜா, ஜெ.பிரேம் ஆனந்த், தேவிகதிரேசன் எம்.சி, குமாரிநாகராஜன் எம்.சி, பவித்ராநரேஷ்குமார் எம்.சி, எம்.எம்.சாமி, பி.அன்பழகன், ஆர்.ரமேஷ், பி.கே. மூர்த்தி, ஜெ.சுரேஷ்பாபு, வி.முத்து, டி.ஆர்.தணிகாசலம், கே.மோகன், சா.திருப்பதிசாமி, மா. ரூபசங்கர், சே.அரிஷ்குமார், கோ.பூங்கோதை, வண்ணைதேவகி சண்முகம், மு.ஜெகன், மா.பாஸ்கரன், ஏ.விந்தன், ஜி.ராஜ்குமார், அ.அல்லாபிச்சை, எல்.கமல்நாத், இ.வெங்கடேசன், ஜெ.ஜான் பிராங்கிளின், மற்றும் கழக நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட அணி துணை அமைப்பாளர்கள், பகுதி அணி துணை அமைப்பாளர்கள், மற்றும் கழக தோழர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ப.குமார் நன்றி கூறுகிறார்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் 103 வது பிறந்தநாள் விழா முன்னிட்டு

அயப்பாக்கம் ஊராட்சி தி.மு.க. சார்பில் 1300 நபர்களுக்கு அறுசுவை உணவு!

ஒன்றியக் கழகச் செயலாளர் அயப்பாக்கம் துரை வீரமணி வழங்குகிறார்!

சென்னை, ஜூன். 02 - சென்னை தெற்கு மாவட்டம், வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின், தமிழ்நாடு சட்டமன்ற எதிர்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. ஆகியோர் ஆலோசனைப்படியும், சென்னை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் மா.சுப்பிரமணியன் வழிகாட்டுதலின்படி, அயப்பாக்கம் ஊராட்சி தி.மு.க. சார்பில் 1300 பேருக்கு அறுசுவை உணவு வழங்கும் விழா இன்று (02.06.2026 - செவ்வாய்க்கிழமை) காலை 10 மணியளவில், திருவேற்காடு மெயின் ரோடு, வாட்டர் டேங்க் அருகில் நடைபெறுகிறது.

இவ்விழாவில் வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் அயப்பாக்கம் துரை வீரமணி கலந்து கொண்டு பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்குகிறார்.

இவ்விழாவில் இரா. வினோத், சண்முகம், மாறன்குமார், ஏ.பி.பாபு, டி.சேகர், எஸ்.செல்லதுரை, ஸ்ரீதர், ஜெ.வெங்கடேசன், ஆர்.மனோகர், முருகன், முத்து, ராபர்ட், ஏ.என். திலீப், பி.பாலாஜி, இ.வெங்கடேசன், எம்.சுதாகர், டி.யுவராஜ், செல்வம், ராம், செண்பகவல்லி, சர்மிளா, கிளியரா, தேன்மொழி, அம்பிகா, தேவி பிரியா, கண்ணன், டி.ரவி, மாலா, அர்ச்சனா, கவிதா, ரேவதி, தரணி, ஜெயந்தி, உஷா, தையல்நாயகி, ஐ.டி. கண்ணன், ராயல் சுந்தரமூர்த்தி செல்வராஜ் மற்றும் கழக முன்னோடிகள் மாவட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள் வார்டு கழக நிர்வாகிகள் கழக அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் கழக உடன்பிறப்புகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அயப்பாக்கம் ஊராட்சி தி.மு.க. கேட்டுக் கொண்டுள்ளது.

துறைமுகம் மேற்கு 59 (அ) வட்டத்தில்

முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா!

வட்டச் செயலாளர் சேப்பாக்கம் பிரபாகரன் அறிக்கை!

சென்னை, ஜூன் 2 கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க

மாவட்டக் கழக செயலாளர், நலத்திட்ட நாயகர், பி.கே. சேகர்பாபு அவர்களின் ஆலோசனையின் படி சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் மேற்குப் பகுதி,

59 (அ) வட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு 59 (அ) வட்டத்தில்,கழக அலுவலகத்தில் கழக கொடி ஏற்றி இனிப்புடன் ஏழை எளியவர்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி 03.06.2026 புதன் கிழமை , நண்பகல் 12 மணி அளவில் நடைபெறுகிறது.

வட்டக் கழக செயலாளர் சேப்பாக்கம் வே.பா. பிரபாகரன் தலைமையில் , பகுதிக் கழக செயலாளர் எஸ். முரளி , எஸ் ராஜசேகர் அவர்கள் முன்னிலையில். மாவட்டக் கழகத்தின் செயலாளர் ,நலத்திட்ட நாயகர், பி.கே. சேகர்பாபு ,கலைஞர் அவர்களின் திருஉருவ சிலைக்கு மாலை அணிவித்து அறுசுவை உணவை 500 நபர்களுக்கு வழங்கி சிறப்பிக்கிறார்.

எனவே, வட்டக் கழக நிர்வாகிகள், வட்டக்கழக செயற்குழு உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், பாக நிலை முகவர்கள், பாக நிலை உறுப்பினர்கள்,கழகத்தின் மூத்த முன்னோடிகள்,வெல்லும் தமிழ் பெண்கள் , கலைஞரின் அன்பு உடன்பிறப்புகள் , அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு வட்டச் செயலாளர் சேப்பாக்கம் பிரபாகரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

கோ.சத்தியமூர்த்தி வரவேற்புரை! எம்.சங்கர் தலைமை!

குன்றத்தூர் நகர தி.மு.க. பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம்!

தா.மோ.அன்பரசன் - டி.ஆர்.பாலு எம்.பி. சிறப்புரை!

காஞ்சிபுரம், ஜூன்.2- காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், குன்றத்தூர் நகர தி.மு.க சார்பில் பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் நேற்று (01.06.2026, திங்கட்கிழமை) மாலை 4.00 மணியளவில் அறிஞர் அண்ணா அரங்கம் குன்றத்தூரில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நகர கழக அவைத்தலைவர் எம். சங்கர் தலைமை வகித்தார்.

நகர கழக செயலாளர், நகர மன்ற தலைவர் கோ.சத்தியமூர்த்தி வரவேற்புரை ஆற்றினார்.

டி. கே.குமாரசாமி, டி. எஸ்.கலைச்செல்வன், கே. கே.இராசமாணிக்கம், அ. தமிழ்மாறன், டி. திருநாவுக்கரசு, என்.குணசேகர், க.வே.சிதம்பரம், ஜெ.மணிமாறன், ஆர். கே.அபிபுன்னிசா, என்.கருணாநிதி, த.கந்தசாமி, டி. என்.அருள்மொழி, டாக்டர் செந்தில்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.மோ.அன்பரசன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. ஆகியோர் ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றினர்.

இக்கூட்டத்தில் குன்றத்தூர் தெற்கு ஒன்றிய செயலாளர் படப்பை ஆ. மனோகரன், என்.பழனி, தி.வே.நமச்சிவாயம், எம். குப்புசாமி, ஜெ.முனுசாமி, டி.வி..சரவணன், கே.எஸ். ராஜி, டி.எம்.உமாசங்கர், டாக்டர் ஜி.பாபு, ஆர். கே. சையத்யூசப், ப.தீன தயாளன், ம.ஹரி, எம்.பக்தவச்சலம், ஜெ.தயாளன், இ.பலராமன், எம்.உமாபதி, கே. வஜ்ஜிரவேல், டி.காசிநாதன், கே.நாகேந்திரன், சி.பாபு உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். குன்றத்தூர் நகர இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.கே..டில்லிபாபு நன்றி கூறினார்.

இக்கூட்டத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாள் விழா, 2026 சட்டமன்ற தேர்தல் பற்றிய விளக்கம், கழகத்தின் வளர்ச்சி பணி ஆகியவை குறித்து ஆலோசிக்கப்பட்டது.